## ஆயுர்வேத வைத்திய சபை - 2018

---

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஆயுர்வேத வைத்திய சபையின் (சபை) 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு சபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.
- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு சபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன்

தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் சபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- சபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- சபை அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- சபையின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| குறித்த நியமங்கள் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 1 இன் 132 ஆம் பந்தியின் பிரகாரம், நிதிக்கூற்றுக்களில் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் வெளிப்படுத்தப்பட வேண்டுமென்ற போதிலும், சபைக்கு கிடைக்கின்ற அரச மானியங்கள் தொடர்பிலான கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக்கூற்றில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2019 ஆம் ஆண்டு முதல் ஆயுர்வேத வைத்திய சபைக்கு கிடைக்கும் அரச மானியத்திற்கான கணக்கீட:டு கொள்கை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படும். | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். குறிப்பிடப்பட்ட வழுவை நிவர்த்தி செய்த பின்னரே 2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு பிரச்சினை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 ஆம் ஆணடில் நடைபெற்ற பயிற்சிப் பட்டறையின் மீது ஏற்பட்ட செலவுக்காக சுகாதார போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சிடம் இருந்து ரூபா 67,500 தொகை சபைக்கு கிடைக்கப்பெற்றிருந்தது. எவ்வாறாயினும், அதன் மீதான வருமானம் மற்றும் செலவுகள் கணக்குகளில் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2019 ஆம் ஆண்டில் நிவர்த்தி செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்படும். | குறிப்பிடப்பட்ட வழுவை நிவர்த்தி செய்த பின்னரே 2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

### 1.5.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்தவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 1961 இன் 31 ஆம் இலக்க ஆயுர்வேத அதிகாரச்சட்டத்தின் III ஆவது பகுதியின் 11(1) (உ) பிரிவு | பதிவு செய்யப்பட்ட ஆயுர்வேத வைத்தியர்களில் மூன்று அங்கத்தவர்களும் மற்றும் ஒவ்வொரு அங்கீகரிக்கப்பட்ட ஆயுர்வேத கல்வி நிறுவனத்திலிருந்து ஒரு அங்கத்தவரும் சபையின் அங்கத்தர்வர்களாக தேர்ந்தெடுக்கப்பட வேண்டியிருந்த போதிலும், குறிப்பிட்ட 4 அங்கத்தவர்களை தேர்ந்தெடுப்பதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2019 ஆம் ஆண்டு முடிவடைவதற்கு முன்னர் வாக்கெடுப்பு மூலம் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய மூன்று அங்கத்தவர்களை தேர்ந்தெடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும் மற்றும் ஆயுர்வேத கல்வி நிறுவனங்களிலிருந்து ஒரு அங்கத்தவரை தேர்வு செய்வதற்கு அமைச்சின் சுதேச மருத்துவ பிரிவிற்கு தெரிவிக்கப்பட்டது. | ஆயுர்வேத அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 2005 யூலை 05 திகதியிடப்பட்ட 14/3/08(03) ஆம் இலக்க வைத்திய சபை பத்திரம் | சபையில் பதிவு செய்துள்ள அனைத்து வைத்தியர்களும் ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை புதுப்பிக்க வேண்டும். எவ்வாறாயினும், மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான 5 வருடங்களை தாண்டிய 6199 வைத்தியர்கள் அவர்களுடைய பதிவினை புதுப்பித்திருக்கவில்லை. பதிவினை புதுப்பிப்பதற்கான முறையான நடைமுறை சபையினால் இனங்காணப்பட்டு செயல்படுத்தப்பட்டிருக்க வில்லை. இதன் காரணமாக சபைக்கு ஏற்பட்ட வருமான இழப்பு ரூபா 6,955,250 ஆகும். | இது தொடர்பாக தொடர்புடைய வைத்தியர்களுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. அவர்களுடைய பதிவினை புதுப்பிக்காத வைத்தியர்களுக்காக எந்தவொரு செயற்பாடும் சபையினால் நிறைவேற்றப்பட்டிருக்கா மை , எந்தவொரு பயிற்சி வகுப்பிற்கும் அவர்களை குறிப்பிட்டிருக்காமை மற்றும் 2019 ஆம் ஆண்டு முதல் காலமாதமக் கட்டணமாக வருடாந்தம் ரூபா 300 இனை மீளப் பெற்றமை போன்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. | ஆயுர்வேத வைத்திய சபை பத்திரத்தின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்களின் நிதிப்பிரமாணம் 756 | முந்தைய ஆண்டு பொருள் மெய்மைய்வு அறிக்கைகளினால் சுட்டிக்காட்டப்பட்ட பரிந்துரையானது 2019 மே 31 வரைக்கும் கூட அமுல்படுத்தப்பட்டிருக்க வில்லை. | இது தொடர்பாக உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்படும். | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்படும். |
| (ஈ) | தாபனக் கோவையின் அத்தியாயம் XXI | தாபனக் கோவையின் பிரகாரம் சீருடைகளுக்கு உரித்தற்ற 10 உத்தியோகத்தர்களுக்கு சீருடைகள் பெறுகை செய்வதற்கு ரூபா 95,800 தொகை ஏற்பட்டிருந்தது. | ஆயுர்வேத அதிகாரச்சட்டத்தினால் வைத்திய சபைக்கு வழங்கப்பட்ட அதிகாரம் மற்றும் சபையின் அங்கீகாரத்தின் பிரகாரம் ஆண்டுதோறும் சீருடைகள் பெறுகை செய்யப்படுகின்றன. | தாபனக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | 2009 ஏப்ரல் 16 திகதியிடப்பட்ட 09/2009 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் iv ஆம் பிரிவு | மேலதிக நேரம் மற்றும் விடுமுறை நாள் கொடுப்பனவுகள் விரல் அடையாள இயந்திரம் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்ற போதிலும் விரல் | பொது நிர்வாக சுற்றறிக்கையை பின்பற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | பொது நிர்வாக சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அடையாள இயந்திரம் பொருத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. உள்வருதல் மற்றும் வெளிச் செல்லுதல் என்பன விரல் அடையாள இயந்திரம் மூலம் உறுதிப்படுத்தப்படாமல் 2018 ஆம் ஆண்டில் மேலதிக நேர கொடுப்பனவாக ரூபா 730,440 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | | |
| (ஊ) 2003 யூன் 02 திகதியிடப்பட்ட 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | | | |
| (i) பிரிவு 6.5.3 | 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளுடன் தொடர்புடைய ஆண்டறிக்கைகள் 2019 யூன் 03 வரைக்கும் கூட பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. | 2016 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கையினை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டதுடன் 2017 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை அமைச்சரவையின் அங்கீகாரத்திற்காக குறிப்பிடப்பட்டது. | பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ii) பிரிவு 9.3.1 | வைத்திய சபையின் உயர் முகாமைத்துவ மட்டத்திலுள்ள பதவியான பதிவாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பு திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்காதது டன் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரமும் பெறப்பட்டிருக்கவில்லை. | பதிவாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பு திட்டமொன்றை தயாரித்து மருத்து சபையின் அங்கீகாரத்தை பெறுவதற்கும் வர்த்தமானியில் வெளியிடுவதற்கும் அமைச்சிற்கு குறிப்பிடுவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படும். | பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.4 அங்கீகரிக்கப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு பிரச்சனை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தாபனப் பணிப்பாளரினால் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ளாமல் சபையில் நடைபெற்ற 6 துணைக் குழுக்கள், ஒரு முன் விசாரணை குழு மற்றும் ஒரு அபராத குழு ஆகியவற்றில் பங்கேற்றமைக்காக ஒரு உத்தியோகத்தருக்கு தலா ரூபா 1,000 வீதம் மொத்தமாக ரூபா 146,000, ரூபா 21,000 மற்றும் ரூபா 11,000 என்பன முறையே பங்கேற்பு படிகளாக மீளாய்வாண்டில் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | தாபன பணிப்பாளரின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ள குறிப்பிடப்படும். | தாபன பணிப்பாளரின் அங்கீகாரம் பெறப்பட வேண்டும். |
| (ஆ) | ரூபா 180,000 ஒரு அதிகமாக சபையின் இலாபம் இருக்கும் சந்தர்ப்பங்களில் மாதம் ரூபா 1,800 வீதம் மற்றும் ரூபா 2,800 அதிகபட்ச வரம்புக்கு உட்பட்டதாக ஒவ்வொரு ரூபா 10,000 வளர்ச்சிக்கும் 5 சதவீதம் பிரகாரம் சபையின் உத்தியோகத்தர்களுக்கு ஊக்குவிப்பு தொகையினை செலுத்துவதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் ரூபா 1,286,058 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன், அவ்வாறான இலாபங்கள் ஏற்பட்டிருக்கவில்லை. மற்றும் 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் பற்றாக்குறைகள் ஏற்பட்டன. | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் இருந்து விளக்கமளித்தலை பெற்றுக்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்படும். | முறையான அங்கீகாரத்துடன் ஊக்குவிப்பு படிகள் செலுத்தப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 1,906,516 தொகை பற்றாக்குறை ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 765,079 தொகையானதால் நிதி விளைவுகளில் ரூபா 1,141,437 தொகையான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. பொது மேந்தலை செலவுகள் ரூபா 1,101,913 ஆலும், நிதிச் செலவுகள் ரூபா 580,091 ஆலும் மற்றும் ஏனைய செலவுகள் ரூபா 591,384 ஆலும் அதிகரித்தமையே இந்த வீழ்ச்சிக்கான காரணங்கள் ஆகும்.

### 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடயங்களின் போக்கு பகுப்பாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகின்ற போது, மீளாய்வாண்டிற்கான வைத்தியர்களின் பதிவுக்கட்டணங்கள், ஏனைய வருமானம், பொது மேந்தலை செலவு, நிதி செலவு மற்றும் ஏனைய செலவுகள் என்பன முறையே 46 சதவீதம், 42 சதவீதம், 11 சதவீதம், 362 சதவீதம் மற்றும் 44 சதவீதத்தால் அதிகரித்திருந்தன.

### 2.3 விகிதப் பகுப்பாய்வு

முன்னைய ஆண்டுடன் மீளாய்வாண்டினை ஒப்பிடுகின்ற போது நடைமுறை விகிதம் 2.8 சதவீதத்தால் குறைந்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு பிரச்சனை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஆயுர்வேத வைத்தியர்களின் பதிவினை புதுப்பிக்கின்ற போது புதிய சான்றிதழ் ஒன்றினை வழங்கவும் குறிப்பிடப்பட்ட 6000 சான்றிதழ்களை அச்சிடவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன. 2015 இலிருந்து 2018 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் பதிவினை புதுப்பிக்க பணம் செலுத்திய 4993 பேரில் 197 வைத்தியர்களுக்கு புதிய சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருந்தன.எவ்வாறாயினும், ஆயுர்வேத வைத்திய சபையின் வைத்தியர்கள் மற்றும் பாரம்பரிய வைத்தியர்களினை பதிவு செய்தல், பரீட்சைகளை நடாத்துதல், பரீட்சை பெறுபேறுகளை விநியோகித்தல், மற்றும் செயல்திறனை மீளாய்வு செய்தல் போன்ற நடவடிக்கைகளின் முன்னேற்றத்தை மதிப்பீடு செய்வதற்கான செயல்திறன் குறிகாட்டிகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போதைக்கு, ஏற்கனவே கட்டணங்களை செலுத்திய வைத்தியர்களுக்கு 1124 சான்றிதழ்கள் விநியோகிக்கப்பட்டன, இந்த ஆண்டின் இறுதிக்குள் அனைத்து வைத்தியர்களுக்கும் சான்றிதழ்கள் விநியோகிப்பதை நிறைவு செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்படும். | 2015 திசெம்பர் 08 ஆந் திகதியிடப்பட்ட ஆளுகை சபையின் பரிந்துரையின் பிரகாரம், பதிவு செய்யப்பட்ட வைத்தியர்களுக்கு சான்றிதழ்களை விநியோகிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | பாரம்பரிய வைத்தியர்களை பதிவு செய்வதற்கான எழுத்துப் பரீட்சை 2018 யூலை 21 மற்றும் 22 இல் இடம்பெற்றிருந்ததுடன் 2019 மார்ச் 01 அன்று பெறுபேறுகள் வெளியிடப்பட்டிருந்தன. பரீட்சையின் ஒவ்வொரு பாடத்திலும் சித்தியடைய தேவையான மதிப்பெண்கள் 40 சதவீதமாக இருந்த போதிலும், பலவீனமான சித்திகளைப் பெற்ற 09 நபர்களுக்கும் 36.5 சதவீதம் முதல் 39.7 சதவீதம் வரை தோல்வியடையும் மதிப்பெண் எல்லையுடன் பரீட்சையில் | குறிப்பிடப்பட்ட காரணத்திற்காக புலனாய்வு குழு ஒன்று நியமிக்கப்பட்டதுடன் குழு அறிக்கை கிடைக்கப்பெற்ற பின்னர் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | முறையான புலனாய்வை மேற்கொண்டதன் பின்னர் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தோல்வியடைந்த 09 நபர்களுக்கும் முறையே சித்தியடைவதற்காகவும் மற்றும் பலவீனமாக சித்தியடைவதற்காகவும் பரீட்சை நிர்வாக சபையின் அங்கத்தவர் ஒருவரின் கையொப்பத்தால் மாத்திரம் பரீட்சை பெறுபேறுகள் மாற்றப்பட்டிருந்தன. இருப்பினும் குறிப்பிடப்பட்ட தோல்வியும் மதிப்பெண் எல்லையில் மதிப்பெண்களை பெற்ற 09 விண்ணப்பதாரிகளை சித்தியடையச் செய்வதற்கு அல்லது பலவீனமாக சித்தியடையச் செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | ஆயுர்வேத அதிகாரச்சட்டம் மற்றும் ஒழுக்காற்று கட்டளைகளை திருத்தம் செய்யப்பட்டதன் பின்னர் முறைப்பாடுகளை உடனடியாக புலனாய்வு செய்வதற்காக நடைமுறை நிறுவப்பட்டிருக்கவில்லை. போலி வைத்தியர்கள் தொடர்பில் 13 மற்றும் 14 முறைப்பாடுகள் மீளாய்வாண்டின் காலப்பகுதியிலும் முன்னைய ஆண்டிலும் முறைப்பாடு கிடைக்கப்பெற்றிருந்தன. அவற்றில், 03 மற்றும் 10 முறைப்பாடுகளின் புலனாய்வுகள் 2019 யூன் 12 வரைக்கும் பூர்த்தியடைந்திருக்கவில்லை. மற்றும் முறையாக பூர்த்தி செய்யப்பட்டிருந்த புலனாய்வுகளில் 10 மற்றும் 04 புலனாய்வுகளுக்காக பின்தொடர் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருக்கவில்லை. புலனாய்வுகள் நிறைவடைந்த பெரும்பாலான முறைப்பாடுகள் ஆயுர்வேத அதிகாரச்சட்டம் மற்றும் ஒழுக்காற்று கட்டளைகள் சரியான நேரத்தில் திருத்தம் செய்யப்படாமையால் எச்சரிக்கைகள் மற்றும் அறிவுறுத்தல்களால் மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. | ஆயுர்வேத அதிகாரச்சட்டத்தை திருத்துதல் அமைச்சினால் செய்யப்பட வேண்டும். ஒழுக்காற்று கட்டளைகளை திருத்தம் செய்வதற்கான முன்மொழிவு அமைச்சருக்கு சமர்ப்பிக்கப்படும், குறிப்பிடப்பட்ட நடைமுறையை நிறுவிய பின்னர், பதிவு செய்யப்பட்ட வைத்தியர்கள் தொடர்பில் பெறப்பட்ட முறைப்பாடுகளை புலனாய்வு செய்ய முடியும் மற்றும் 14 நபர்கள் தொடர்பான பூர்வாங்க புலனாய்வுகள் பூர்த்தி செய்யப்பட்டதுடன் அபராத குழுவை அழைப்பதற்கு முன்னர் அவர்களிடம் இருந்து விளக்கம் கோரப்பட்டது. | ஆயுர்வேத அதிகாரச்சட்டம் மற்றும் ஒழுக்காற்று கட்டளைகள் சரியான நேரத்தில் திருத்தம் செய்யப்பட்டு முறைப்பாடுகள் உடனடியாக புலனாய்வு செய்யப்பட வேண்டும். |

## 3.2 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு பிரச்சனை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் போது மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் பூர்த்தி செய்யப்பட வேண்டிய 09 உத்திகள் தொடர்பான 16 செயல்நடவடிக்கைகளை தொடங்குவதற்கு தவறியது. | 2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அடைய முடியாத செயற்பாடுகள் 2019 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன மற்றும் அந்த நோக்கங்களை அடைவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. | ஆண்டு காலப்பகுதியில் அடைய முடியுமான செயற்பாடுகளை செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டியதுடன் செயல் நடவடிக்கைத் திட்டத்தினை சரியான முறையில் திருத்தம் செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

| கணக்காய்வு பிரச்சனை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2003 யூன் 02 ஆம் திகதியிடப்பட்ட பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரிவு 6.5.1 இன் ஏற்பாடுகள் மற்றும் 2004 பெப்ரவரி 24 ஆந் திகதியிடப்பட்ட 01/2004 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் நியதிச்சட்ட சபையானது நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் வருடாந்த நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். எவ்வாறாயினும், மீளாய்வாண்டிற்கான சபையின் நிதிக்கூற்றுக்கள் 27 நாட்கள் தாமதத்துடன் 2019 மார்ச் 27 அன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் உரிய திகதியில் தயாரிக்கப்பட்டிருந்தது. கணக்காய்வு சட்டத்தின் பிரகாரம் பணிப்பாளர்கள் சபையிடம் இருந்து பெற்றுக்கொள்ள வேண்டிய ஆவணங்களை பெற்றுக் கொள்வதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக அதை சமர்ப்பிக்க முடிந்திருக்கவில்லை மற்றும் நிதிக்கூற்றுக்கள் 2019 ஆம் ஆண்டு உரிய திகதியில் சமர்ப்பிக்கப்படும். | பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

**4.2 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

| கணக்காய்வு பிரச்சனை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| ஐக்கிய நாடுகள் சபையின் நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் அனைத்து அரச நிறுவனங்களும் செயற்பட வேண்டும். மீளாய்வாண்டிற்கான அவற்றின் எல்லைக்கு உட்பட்ட நடவடிக்கைகள் தொடர்பில் எவ்வாறு செயற்படவேண்டும் என்பது பற்றி சபை அறிந்திருக்கவில்லை. | தொடர்புடைய சுற்றறிக்கையின் பிரகாரம் வைத்தியசாலையின் எல்லைக்குட்பட்ட நடவடிக்கைகள் தொடர்பில் நடவடிக்கைகளை எடுப்பதற்கான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன. | பொருளாதார அலுவல்கள் அமைச்சின் செயலாளரினால் வெளியிடப்பட்ட 2017 ஆகஸ்ட் 14 இல் என்பி/எஸ்பி/எஸ்டீஜீ/17 இன் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |